வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—மலர்விழி

தேதி 16.10.2025 நேரம் 6.10 மணி

---------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று ஆந்திர மாநிலம் கர்னூலில், 13 ஆயிரத்து 430 கோடி ரூபாய் மதிப்பில், பல்வேறு திட்டங்களைத் தொடக்கி வைத்து, வேறுபல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

குற்றம், ஊழல் மற்றும் தீவிரவாதத்தை கொஞ்சம் கூட சகித்துக் கொள்ள முடியாத கொள்கை ஒன்றை அரசு கடைபிடித்து வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறி உள்ளார்.

பீகாரில், முதல் கட்ட சட்டமன்ற தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் நாளையுடன் முடிவடையும் நிலையில், இன்று முக்கிய வேட்பாளர்கள் வேட்புமனு தாக்கல் செய்தனர்.

தமிழ்நாடு, புதுச்சேரி-காரைக்கால், கேரளா-மாகே, கடலோர ஆந்திரப் பிரதேசம், மற்றும் தெற்கு உட்புற கர்நாடகத்தில், வடகிழக்கு பருவமழை இன்று தொடங்கி உள்ளது.

மோடி-ஆந்திரா

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று ஆந்திர மாநிலம் கர்னூலில் நடைபெற்ற விழாவில், தொழில், சாலை, ரயில்வே, பாதுகாப்பு உற்பத்தி, எண்ணெய்-எரிவாயு உட்பட பல்வேறு துறைகள் தொடர்பான வளர்ச்சி திட்டங்களைத் தொடக்கி வைத்து, வேறுபல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். பிராந்திய அளவிலான உள்கட்டமைப்பு வசதிகளை

மேம்படுத்துவதன் மூலம், தொழில் மையத்தைத் துரிதமாக்கி, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை உறுதிப்படுத்துவதில், அரசுக்குள்ள உறுதிப்பாட்டை வெளிப்படுத்தும் வகையிலான இத்திட்டங்களின் மொத்த மதிப்பு, 13 ஆயிரத்து 430 கோடி ரூபாயாகும். விழாவில், ஆந்திர முதலமைச்சர் திரு சந்திரபாபு நாயுடு, துணை முதலமைச்சர் திரு பவன் கல்யாண் உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டனர். முன்னதாக, 1 நாள் ஆந்திரப் பயணமாக இன்று காலை கர்னூல் வந்து சேர்ந்த பிரதமர் திரு நரேந்திர மோடி, **ஸ்ரீசைலத்தில் உள்ள பிரமராம்பா-மல்லிகார்ஜுன சுவாமி** கோவிலில் வழிபட்டார். 12 **ஜோதிர்லிங்க தலங்கள்** மற்றும் 51 **சக்தி பீடங்களில்** ஒன்றான இக்கோவிலில், சுவாமி மற்றும் அம்பாளுக்கு சாற்றிய வஸ்திரங்களும், படங்களும் பிரதமருக்கு பரிசளிக்கப்பட்டன. தொடர்ந்து பிரதமர் திரு நரேந்திர மோடி, **சத்ரபதி சிவாஜி மகராஜ்** புகழை போற்றும் வகையிலான **ஸ்ரீ சிவாஜி ஸ்பூர்த்தி கேந்திரத்தையும்** நேரில் சென்று பார்வையிட்டார்.

*சந்திப்பு*

தொலைதொடர்பு மற்றும் வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சிக்கான மத்திய அமைச்சர் திரு ஜோதிராதித்யா சிந்தியா, இன்று புதுடெல்லியில் குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணனை சந்தித்துப் பேசினார். நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற இந்த சந்திப்பின் போது, அமைச்சகத்தின் முக்கிய முன்முயற்சிகள் குறித்தும், எதிர்கால திட்டங்கள் குறித்தும் குடியரசு துணைத் தலைவரிடம் எடுத்துக் கூறப்பட்டது. நாட்டில் தொலை தொடர்பு மற்றும் இன்டர்நெட் சேவைக்கான கட்டமைப்பு வசதிகள் வேகமாக விரிவடைந்து வருவது குறித்தும் கடைசி மனிதன் வரை அனைவருக்கும் மலிவான கட்டணத்தில் டேட்டா இணைப்பு வழங்குவதற்கான அரசின் முயற்சிகள் குறித்தும் விளக்கம் அளிக்கப்பட்டது. நாடு முழுவதும் ஏற்கனவே பரவி உள்ள அஞ்சல் துறை கட்டமைப்பு மூலம், இந்தியா போஸ்ட் பட்டுவாடா வங்கி உட்பட புதுமையான திட்டங்களை அரசு செயல்படுத்தி வருவது குறித்தும் எடுத்துக் கூறப்பட்டது. இதுஅல்லாது, வடகிழக்கு பிராந்தியத்தில்

வளர்ச்சி வேகம் அதிகரித்து வருவதையும் தாம் அறிந்து மகிழ்ச்சி அடைவதாக குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் சமூக ஊடகப் பதிவு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

*அமித் ஷா*

குற்றம், ஊழல் மற்றும் தீவிரவாதத்தை கொஞ்சம் கூட சகித்துக் கொள்ள முடியாத கொள்கை ஒன்றை அரசு கடைபிடித்து வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறி உள்ளார். குற்றம் புரிந்து விட்டு வெளிநாடுகளுக்கு தப்பியவர்களைப் பிடித்துக் கொண்டு வருவதில் உள்ள சவால்கள் மற்றும் இதற்கான உத்திகள் குறித்து சிபிஐ சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 2 நாள் மாநாட்டை, புதுடெல்லியில் இன்று அவர் தொடக்கி வைத்து பேசினார். உள்துறை அமைச்சரின் உரை குறித்து கூடுதல் விவரங்கள் …………..

(வாய்ஸ்)

*அமித் ஷா*

<u>(வாய்ஸ்)</u>

குற்றம் புரிந்த அனைவரையும் சட்டத்தின் முன் நிறுத்த, வலுவான அமைப்பு முறை ஒன்றை அரசு உருவாக்கி வருவதாக அமைச்சர் தெரிவித்தார். குற்றம் புரிந்து விட்டு வெளிநாடுகளுக்கு தப்பியவர்களின் சொத்துக்களை முடக்க, சட்டம் கொண்டுவரப் பட்டுள்ளதாகவும், கடந்த 4 ஆண்டுகளில் இந்த சட்டத்தின் கீழ் 2 பில்லியன் டாலர் பணம் மீட்கப் பட்டுள்ளதாகவும், அவர் கூறினார். வலுப்படுத்திய பணச் சலவை தடுப்பு திட்டத்தின் கீழ் கடந்த 10 ஆண்டுகளில் 12 பில்லியன் டாலர் மதிப்புள்ள சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

குற்றம் புரிந்துவிட்டு வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்றவர்களை பிடித்துக் கொண்டு வர, சிபிஐ, உலக அளவிலான ஒத்துழைப்பு மையம் ஒன்றை அமைத்து இருப்பதாக திரு அமித் ஷா தெரிவித்தார். மாநில அரசுகளும் சிபிஐ-யுடன் இணைந்து, இதற்கான தனிக் கட்டமைப்பு வசதிகளை உருவாக்கலாம் என்று அவர் ஆலோசனை வெளியிட்டார்.

சிபிஐ இயக்குநர் திரு பிரவீண் சூட், இம்மாநாட்டில் பேசுகையில் குற்றம் புரிந்து விட்டு இந்தியாவில் இருந்து தப்பியவர்களை தேடிப் பிடிக்க, இந்திய வேண்டுகோளின் பேரில், 957 இன்டர்போல் நோட்டிசுகள் வெளியிடப்பட்டுள்ளதாக தெரிவித்தார். நடப்பாண்டில் இதுவரை 35 குற்றவாளிகள் பிடித்துக் கொண்டு வரப் பட்டுள்ளதாகவும், இத்தகைய மேலும் 338 பேரை பிடிக்க, பல்வேறு நாடுகளிடம் வேண்டுகோள் விடுக்கப் பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். இந்த 2 நாள் மாநாட்டில், மத்திய காவல் படைகள் மற்றும் மாநில காவல் துறைகளைச் சேர்ந்த மூத்த அதிகாரிகள் பங்கேற்றுள்ளனர்.

*பிடிஎம்சி-திட்டம்*

விவசாயப் பணிகளில் பாசன நீரின் திறம்பட்ட பயன்பாட்டை உறுதிப்படுத்துவதன் மூலம் விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தும் நோக்கிலான, ஒவ்வொரு துளியிலும் கூடுதல் பயிர் திட்டத்தில் நெகிழ்வுத் தன்மையை மேம்படுத்தும் வகையில் மத்திய அரசு புதிய விதிமுறைகளை வெளியிட்டுள்ளது. இதன்படி மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகள் இனி, தத்தம் உள்ளூர் தேவைகளுக்கு ஏற்றபடி, மழை நீர் சேகரிப்பு திட்டங்களையும், சிறு அளவிலான நீர் மேலாண்மை செயல்பாடுகளையும் திட்டமிட்டு செயல்படுத்திக் கொள்ளலாம் என மத்திய வேளாண் அமைச்சகம் தெரிவித்துள்ளது. விவசாயிகள் மற்றும் விவசாய சமூகத்தினரின் தேவைக்கேற்ற திட்டங்களால் விவசாயிகள் நீரை திறம்பட்ட முறையில் பயன்படுத்தவும் இதன் மூலம் உற்பத்தி திறன் மற்றும் வருமானத்தை பெருக்கி கொள்ளவும் ஏதுவாகும்.

*பீகார்*

பீகாரில், முதல் கட்ட சட்டமன்ற தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் நாளையுடன் முடிவடையும் நிலையில் இன்று பல்வேறு அரசியல் கட்சிகளின் முக்கிய வேட்பாளர்கள், தங்களின் வேட்புமனுக்களை தாக்கல் செய்தனர். மூத்த பிஜேபி தலைவரும் துணை முதலமைச்சருமான திரு சாம்ராட் சவுத்ரி, தாராபூர் தொகுதியில் வேட்புமனு தாக்கல் செய்தார்.

ஜனசக்தி ஜனதா தளம் என்ற பெயரில் புதுக்கட்சி தொடக்கி உள்ள திரு தேஜ்பிரதாப் யாதவ், மாஹூவா தொகுதியிலும் முன்னாள் மத்திய அமைச்சர் திரு ராம்கிருபால் யாதவ், தானாபூர் தொகுதியிலும் மனுதாக்கல் செய்தனர். தானாபூரில் உத்தரபிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யநாத், இன்று தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டம் ஒன்றில் பேசுகையில், தேசிய ஜனநாயக கூட்டணியின் இரட்டை எஞ்சின் அரசு எங்கெல்லாம் உள்ளதோ, அங்கெல்லாம், வளர்ச்சியும் சட்டம்-ஒழுங்கும் மேம்பட்டுள்ளதாக கூறினார். இதற்கிடையே, ஐக்கிய ஜனதா தளத்தின் தேசிய தலைவரும், பீகார் முதலமைச்சருமான திரு நிதிஷ்குமார் இன்று தர்பங்கா உள்ளிட்ட இடங்களில் பிரச்சாரப் பொதுக் கூட்டங்களில் கலந்து கொண்டு, சட்டமன்ற தேர்தலுக்கான தனது பிரச்சாரத்தை தொடங்குகிறார்.

*ஜிஎஸ்டி- மத்திய பிரதேசம்*

பிரதமர் திரு நரேந்திர மோடி கடந்த மாதம் 22 ஆம் தேதி அறிவித்த ஜிஎஸ்டி சேமிப்பு திருவிழாவால் நாடு முழுவதும், அனைத்து பிரிவு மக்களும் பயன் பெற்று வருகின்றனர். அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால், மத்திய பிரதேசத்தில் பொருளாதாரம் எப்படியெல்லாம் ஊக்கம் பெறும் என்பது குறித்து ஒரு செய்தித் தொகுப்பு........

**(வாய்ஸ்)**

*ஜிஎஸ்டி- மத்திய பிரதேசம்*

**(வாய்ஸ்)**

புதிய ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள் மத்திய பிரதேசத்தில், வேளாண்மை, உணவுப் பதனீடு, கைத்தறி, பழங்குடிக் கைவினை உள்ளிட்ட பல்வேறு துறைகளை ஊக்குவிக்கும் வகையில் அமைந்துள்ளன. வேளாண் துறையின் இயந்திர மயத்தில் முக்கிய கேந்திரமாக திகழும் மத்திய பிரதேசத்தில், வரிக் குறைப்பு காரணமாக, டிராக்டர்கள் மற்றும் உழவு கருவிகளின் விலை, 7 முதல் 13 சதவிகிதம் வரை குறைவதால், குறிப்பாக விளிம்பு நிலை விவசாயிகளுக்கு முக்கிய பலன்கள் எதிர்பார்க்கப்

படுகின்றன. போபால், இந்தூர், குவாலியர், விதிஷா உள்ளிட்ட இடங்களில், வேளாண் உபகரணங்களின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள, சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களும், வரிக் குறைப்பினால் பெருமளவில் ஊக்கம் பெற்றுள்ளன. ஜவுளி ரகங்கள் மீதான ஜிஎஸ்டி குறைக்கப்பட்டுள்ளதால் குறிப்பாக நகர்புற நுகர்வோர் பயன் பெறவும், நெசவாளர் குடும்பங்களின் வருவாய் நிலவரம் வலுப்பெறவும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. கைவினைப் பொருட்கள் மீதான ஜிஎஸ்டி, 12 சதவிகித அடுக்கில் இருந்து 5 சதவிகித அடுக்கிற்கு மாற்றப்பட்டுள்ளதால் மத்திய பிரதேசத்தில் குறிப்பாக பழங்குடி இனத்தைச் சேர்ந்த கைவினைக் கலைஞர்கள் ஊக்கம் பெற்றுள்ளனர். புதிய ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால் மாநில அளவிலான பல்வேறு உற்பத்தி பொருட்களின் போட்டித் திறன், வெளிநாட்டு சந்தையிலும் அதிகரித்து, பொருளாதாரம் வலுப்பெறும் என்பதில் ஐயமில்லை.

*வானிலை*

தென்மேற்கு பருவமழை, இன்று இந்தியப் பகுதிகளில் இருந்து முழுமையாக விலகி, தமிழ்நாடு, புதுச்சேரி-காரைக்கால், கேரளா-மாகே, கடலோர ஆந்திரப் பிரதேசம், ராயல் சீமா, மற்றும் தெற்கு உட்புற கர்நாடகத்தில், வடகிழக்கு பருவமழை தொடங்கி உள்ளது. அடுத்த 7 நாட்களில், கேரளா, தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் மழை அதிகரிக்கும் என்றும் வானிலை ஆய்வுத் துறை கணிப்பு வெளியிட்டுள்ளது. இன்றைய தினம், கோவை, நீலகிரி, தஞ்சை-நாகை-திருவாரூர், மயிலாடுதுறை, கடலூர், விழுப்புரம், செங்கல்பட்டு, சென்னை, திருவள்ளுர் உள்ளிட்ட மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் கனமழை பெய்யக் கூடும் என்றும், நெல்லை, குமரி, தேனி, தென்காசி உள்ளிட்ட மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மிக கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சூறாவளி காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள தமிழக கடலோரப் பகுதிகள் வங்க கடல் பகுதிகள் மற்றும், அரபிக் கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில்

அதிகபட்சமாக தூத்துக்குடி மாவட்டம் காயல்பட்டிணம் மற்றும் திருச்செந்தூரில் தலா 15 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது. புதுச்சேரியில் 1 சென்டிமீட்டரை மழை பெய்துள்ளது.

*மகளிர்-கிரிக்கெட்*

உலக கோப்பைக்கான ஐசிசி மகளிர் ஒரு நாள் கிரிக்கெட் போட்டித் தொடரில், பங்களாதேஷ்-ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையே, இன்று விசாகப் பட்டிணத்தில் நடைபெறும் போட்டியில், டாஸ் ஜெயித்து முதலில் ஆடும் பங்களாதேஷ் அணி, சற்று முன் வரை, -------- ஓவர்களில்,--------- விக்கெட் இழப்பிற்கு, ------ ரன் எடுத்திருந்தது.

*புதுச்சேரி-பாஷினி*

புதுச்சேரியில் ராஜீவ்காந்தி சிலைக்கும் இந்திராகாந்தி சிலைக்கும் இடையே மேம்பாலம் அமைக்கும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டும் விழாவில் மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைப் போக்குவரத்து அமைச்சர் திரு நிதின் கட்கரி ஆற்றிய உரை மத்திய தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் மூலமான பாஷினி திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட, ஷ்ருதலேக் மொழி பெயர்ப்பு வசதி மூலமாக நிகழ் நேரத்தில் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு எழுத்து வடிவில் அகன்ற திரையில் காட்டப்பட்டது. அரசு நிர்வாகம் பற்றிய தகவல்கள் மொழி ரீதியில் அனைவருக்கும் சென்று சேர்வதை உறுதிப்படுத்தும் வகையில், செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான இந்த தொழில் நுட்ப வசதி புதுச்சேரியில் முதல் முறையாக பயன்படுத்தப்பட்டுள்ளது. மக்களிடையே வெகுவான வரவேற்பை பெற்ற இந்நடைமுறையை, எதிர்காலத்தில் மத்திய திட்டங்கள் தொடர்பான அனைத்து விழாக்களிலும் பயன்படுத்த வேண்டுமென அரசு செயலர் திருமதி முத்தம்மா கூறினார். அடிக்கல் நாட்டும் விழாவில் துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு ரங்கசாமி, மற்றும் மாநில அமைச்சர்களும், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டதும் குறிப்பிடத் தக்கது.

போட்டி- தேதி

விக்சித் பாரத் இளம் தலைவர்கள் உரையாடல் நிகழ்வை ஒட்டிய வினாடி-வினா போட்டிக்கான கடைசி நாள் இம்மாதம் 31-ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. மை-பாரத் இணையதளம் மூலமாக, இதுவரை 20 லட்சத்திற்கு மேற்பட்ட இளைஞர்கள் இப்போட்டியில் பங்கேற்றுள்ளதாக, மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. இளைஞர்களிடையே காணப்படும் அமோக ஆதரவை கருத்தில் கொண்டு, போட்டியில் கலந்து கொள்வதற்கான அவகாசம் நீட்டிக்கப்படுவதாகவும் அமைச்சகம் கூறி உள்ளது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று ஆந்திர மாநிலம் கர்னூலில், 13 ஆயிரத்து 430 கோடி ரூபாய் மதிப்பில், பல்வேறு திட்டங்களைத் தொடக்கி வைத்து, வேறுபல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

குற்றம், ஊழல் மற்றும் தீவிரவாதத்தை கொஞ்சம் கூட சகித்துக் கொள்ள முடியாத கொள்கை ஒன்றை அரசு கடைபிடித்து வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறி உள்ளார்.

பீகாரில், முதல் கட்ட சட்டமன்ற தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் நாளையுடன் முடிவடையும் நிலையில், இன்று முக்கிய வேட்பாளர்கள் வேட்புமனு தாக்கல் செய்தனர்.

தமிழ்நாடு, புதுச்சேரி-காரைக்கால், கேரளா-மாகே, கடலோர ஆந்திரப் பிரதேசம், மற்றும் தெற்கு உட்புற கர்நாடகத்தில், வடகிழக்கு பருவமழை இன்று தொடங்கி உள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.